காலை முரசு

பக்கங்கள் 19

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 08 சனிக்கிழமை 24.08.2024 | அதிர்வு 022

## 11 இந்திய மீனவர்கள் நேற்று சிறைப்பிடிப்பு

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 11 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் 05▶

# சஜித்துக்கும் அநுரவுக்கும் தக்க பாடம் புகட்ட வேண்டும்

## மக்களிடம் ரணில் பகிரங்கக் கோரிக்கை





அன்று மக்கள் படும் துன்பங்களைக் கண்டு இரக்கமில்லாமல் தப்பியோடி, ஒளிந்த சஜித் பிரேமதாஸவுக்கும், அநுரகுமார எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி வாக்குகளினால் மக்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 05▶

## உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு மக்களுக்குக் கிடைத்த வெற்றி

### ஜனாதிபதித் தேர்தலின் பின் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் என்று மஹிந்த தேசப்பிரிய எதிர்வுகூறல்



ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெறும் என்று முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய எதிர்வு கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு மக்களுக்குக் கிடைத்த வெற்றி 06▶




உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தாமல் முடக்கிய ஜனாதிபதியினதும், முன்னைய தேர்தல் ஆணைக்குழுவினதும் செயற்பாடுகள் வாக்காளரின் அடிப்படை உரிமைகளை மீறும் நடவடிக்கைகள் என்று உயர் நீதிமன்றம் காட்டமாக தீர்ப்பளித்துள்ளது அல்லவா?

அந்த முன்னைய தேர்தல் ஆணைக் குழுவில், இப்போதைய வடக்கு ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் இடம் பெற்றிருந்தார் என்பது தெரிந்ததே.

அந்த ஆணைக்குழுவில் இடம் பெற்றிருந்து, உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த விடாமல் முட்டுக்கட்டை போட்டு, பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து ராஜினாமா செய்து, அதன் மூலம் தேர்தல் ஆணைக்குழுவை பலம் இழக்க வைத்து, ஆற்றிய (நற்) 05▶





## ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்தால்

# ஐ.எம்.எவ். உடன்படிக்கையில் மாற்றத்தை மேற்கொள்வேன்

### சஜித் மீண்டும் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் மாற்றங்களை மேற்கொள்வேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ மீண்டும் தெரிவித்துள்ளார்.

“சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை இப்போது கொண்டிருக்கும் உடன்படிக்கை பொருளாதார வளர்ச்சி குறித்து கவனம் செலுத்தவில்லை. அரசு கடன்பேண்தகு தன்மை குறித்து மாத்திரம் கவனம் செலுத்தக்கூடாது. வர்த்தகத்தின் ஏனைய விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தவேண்டும்.” - என்றும் சஜித் சுட்டிக்காட்டியுள்ளார்.

“இலங்கை அரசும் சர்வதேச நாணய நிதியமும் 2029ஆம் ஆண்டில் 3.1பொருளாதார வளர்ச்சி என்பதையே பொதுக் கொள்கையாகக் கொண்டுள்ளன. இது போதுமானதல்ல. 2029ஆம் ஆண்டுக்கான உலகில் 3.1 வீத பொருளாதார வளர்ச்சி உண்மையில் மந்த நிலையே. ஆதலால், ஐக்கிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மாற்றியமைக்கும்.” - என்றும் சஜித் பிரசாரக் கூட்டமொன்றில் மேலும் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் டெங்குப் பரவலை கட்டுப்படுத்துவதற்கு முயற்சி!

### அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல்

**(ந.லோகதயாளன்)**

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஆண்டு முழுவதும் 204 பேர் டெங்குத் தொற்றிற்கு உள்ளானபோதும் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 228 பேர் இனம் காணப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் கடந்த காலங்களை விட இம்முறை டெங்கு பரவல் அதிகரித்த நிலையில் காணப்படுவதாகவும், டெங்கு நுளம்பின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தத் துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகிற நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அவசர கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே மாவட்ட அரச அதிபர் இவ்வற்றைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் நகரம், பேசாலை பிரதேசத்தின் சில பகுதிகளில் டெங்கு நோய்ப் பரவல் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போது பாடசாலை விடுமுறை காலம் என்பதால் எதிர்வரும் வாரம் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், அனைத்துப் பாடசாலைகளிலும் டெங்கு நுளம்பு சிரமதான பணிகளை முன்னெடுத்து, நீர் தேங்கி நிற்கின்ற இடங்களைத் தவிர்த்து மாணவர்கள் எவ்வித அச்சமும் இன்றி கல்வியைத் தொடர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பில் வலயக்கல்வி பணிமனை ஊடாக உரிய நடவடிக்கைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு திணைக்களங்களிலும் டெங்கு தொடர்பில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் ஊடாக விடயங்கள் கையாளப்பட்டு அலுவலகங்களில் டெங்கு நுளம்பின் பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேசச் செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள்,பொலிஸார்,கடற்படை மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# யாரை ஆதரிப்பது என்பதை முஸ்லிம்கள் சிந்தித்துத்தான் தீர்மானிக்க வேண்டும்!

## பைஸர் முஸ்தபா தெரிவிப்பு

"ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் யார் பக்கம் இருந்தாலும் முஸ்லிம் சமூகம் சிந்தித்து தீர்மானம் எடுக்க வேண்டும். அதேபோன்று முஸ்லிம் சமூகத்தை பலி கொடுத்து முஸ்லிம் தலைவர்கள் எந்த வேட்பாளருக்கும் ஆதரவு வழங்க முற்படக்கூடாது."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் பைஸல் முஸ்தபா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று அவரது கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

"எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்திருக்கிறது. கட்சியின் தீர்மானத்துடனே நானும் இருக்கிறேன். என்றாலும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் சஜித் பிரேமதாஸவுடன் இருந்தாலும் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் இருக்கின்றனர். இது முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் இரட்டை நிலைப்பாட்டைக்கொண்ட கொள்கையாகும்.

முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் ஒரு பக்கம் இருந்துகொண்டு அவர்களின் ஏனைய உறுப்பினர்களை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க அந்த தலைவர்கள்தான் அனுப்பியிருக்க வேண்டும்.

இதற்கு முன்னரும் நாடாளுமன்றத்தில் அரசமைப்பின் 20ஆம் திருத்தத்தின்போதும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் அதற்கு எதிராக வாக்களித்தபோதும் அவர்களின் ஏனைய உறுப்பினர்கள் ஆதரவான வாக்களித்தனர். அதற்காக அந்த கட்சிகள் இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றும் நடவடிக்கையாகும்.

அதனால் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் சஜித் என யாருக்கும் ஆதரவளிக்க தீர்மானித்தாலும் முஸ்லிம் சமூகம் முஸ்லிம் அரசியல் தலைவர்களை பார்த்து தீர்மானிக்காமல், சுயமாக சிந்தித்து, முஸ்லிம் சமூகத்துக்கு நாட்டுக்கும் பொருத்தமானவர் யார் என்பதை தீர்மானித்து வாக்களிக்க வேண்டும்.

அதேபோன்று முஸ்லிம் அரசியல்வாதிகளும் முஸ்லிம் சமூகத்தை பழிகொடுத்து, ஜனாதிபதி வேட்பாளர்கள் யாருக்கும் ஆதரவளிக்க முற்படக்கூடாது. அவர்கள் தங்களுக்கு தேவையான அமைச்சுப்பதவிகளுக்குப் பேரம்பேசிக்கொள்வது எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் சமூகத்தை காட்டி, யாருக்கும் ஆதரவளிக்க முற்படக்கூடாது.

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இனவாதத்தைப் பரப்பியே தேர்தலில் வெற்றிபெற்றது. கொவிட் காலத்தில் முஸ்லிம்களின் கொவிட் தொற்றுக்குள்ளான ஜனாசாக்களை நல்லடக்கம் செய்யும் உரிமையை இல்லாமலாக்கியது. அதனால் ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்தவர்கள் எந்த பக்கத்தில் இருந்தாலும் அந்தத் தரப்புக்கு நான் ஆதரவளிக்கப்போவதில்லை.

ராஜபக்ஷவினருடன் இருந்தவர்கள் தற்போது ரணில் விக்கிரமசிங்க பக்கமும் இருக்கிறார்கள். அதேபோன்று சஜித் பிரேமதாஸ பக்கமும் இருக்கிறார்கள். அதனால் முஸ்லிம் மக்கள் முஸ்லிம் அரசியல் தலைவர்களை நம்பாமல் யாருக்கும் வாக்களிப்பது என்பதை சிந்தித்து தீர்மானம் எடுக்க வேண்டும்."– என்றார்.

# தாயும் இரு பிள்ளைகளும் கோர விபத்தில் படுகாயம்!

யாழ். வடமராட்சி, கரவெட்டியில் இடம்பெற்ற விபத்தில் தாயும், இரண்டு பிள்ளைகளும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு முன்பாக பட்டா ரக வாகனமும், மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் அவர்களுடைய இரண்டு பிள்ளைகளும் படுகாயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# வைத்தியசாலையில் ஸ்ரீகாந்தா




தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் மூத்த சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா உடல்நலக் குறைவு காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் சிகிச்சை பெற்று வருகின்றார்.

திடீரென ஏற்பட்ட உடல் நலக் குறைவால் ஸ்ரீகாந்தா நேற்று மதியம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.


Vijaya Jewellery's
Tamil Fest
தமிழர் தெரு விழா
SINCE 2015 முதல்
AUGUST
SAT 24 12PM - 11PM
SUN 25 11AM - 9PM
MARKHAM ROAD
BETWEEN MCNICOLL & PASSMORE
FREE ADMISSION
POWERED BY
YORK U
Markham Campus
உலகிலேயே அதிக மக்கள் பங்கேற்கும்
மிகப்பெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival in the World
EXPECTED ATTENDEES
300,000 +
Riddim of Remix
Super Sons
TITLE SPONSOR
Vijaya Jewellery
POWERED BY SPONSOR
YORK U
Markham Campus
SILVER SPONSORS
LISA
PRADON
Realty Team
MARKETING PARTNER
Print Fast
PROUDLY PRESENTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
SUPPORTED BY
Canada
MEDIA SPONSORS
ATN
east FM 102.7 தமிழ்
info@canadiantamilcongress.ca 416.240.0078 tamilfest.ca @TamilFest


Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
Architectural Designing
Structural Planning
2D & 3D Drawing
BOQ Assessment
Interior Designing
Landscaping
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேவைக்குக்குப் பிரதியுபகாரமாகவே இந்த ஆளுநர் பதவியை அவருக்கு ஜனாதிபதி வழங்கினார் என்று ஒரு பேச்சும் உண்டு.

இப்போது உள்ளூராட்சித் தேர்தல்கள் முடக்கப்பட்டமை தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றம் தான் வழங்கிய தீர்ப்பில் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸையும் காட்டமாக விமர்சித்திருக்கின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை விடுக்கவும், வேட்பு மனுக் கோரல் தொடர்பான பிரகடனத்தை முன்வைக்கவும் தேர்தல் ஆணையம் முடிவு செய்த எந்தக் கூட்டத்திலும் தாம் பிரசன்னமாகி இருக்கவில்லை என்றும், தாம் அந்தக் கூட்டங்களில் பங்குபற்றவில்லை என்றும் ஆணையாளர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் சத்தியக் கடுதாசி மூலம் உயர் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தார்.

ஆனால், அது தொடர்பாக ஆணைக் குழு நடத்திய முக்கிய கூட்டங்களில் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பங்குபற்றியிருக்கின்றார் என்பது அந்தக் கூட்டங்களின் பதிவேட்டின் மூலம் நிரூபணமாகி உள்ளது என்று குறிப்பிட்டுள்ள உயர்நீதிமன்றம், திருமதி சார்ள்ஸ் வேண்டுமென்றே உயர் நீதிமன்றத்திற்குத் தவறான தகவல்களை தமது சத்தியக் கடதாசி மூலம் வழங்கி, உயர் நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்தி இருக்கிறார் என்றும் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமல்லர், அவரது சார்பில் வடக்கை நிர்வாகிக்கும் அவரது பிரதிநிதியான ஆளுநரும் கூட நாட்டின் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகளை மீறி இருக்கின்றார்கள் என்பது தெளிவாகிறது

\+ \+ \+

மருந்துக் கொள்வனவில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பாக கைது செய்யப்பட்டு நீண்ட காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ஹெகலிய ரம்புக்வெல உட்பட சந்தேக நபர்கள், அதன் காரணமாக மோசமான மனச் சிதைவுக்கும் தற்கொலை எண்ணத்திற்கும் தூண்டப்படக்கூடிய ஆபத்து இருப்பதாக நீதிமன்றுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனால் அவர்களை உளநல மருத்துவ சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் நீதிமன்றத்திடம் கோரப்பட்டுள்ளது.

இதனை புதிய விண்ணப்பமாக நீதிமன்றத்தில் முன் வைத்தால் அது தொடர்பாகப் பரிசீலிக்கப்படும் என நீதிவான் தெரிவித்திருக்கின்றார் என்றும் கூறப்பட்டது.

\+ \+ \+

மன்னாரில் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் சார்பு அலுவலகம் நகரத்தில் செபஸ்தியார் கோவில் வீதியில், நீர் வழங்கல், வடிகால் அமைப்பு சபை அலுவலகத்துக்கு முன்னால் உள்ளது.

திடீரென ஐந்தாறு பனர்கள், காஸ் சிலிண்டர் சின்னத்துடன் பல வர்ணங்களிலும் பிரிண்ட் செய்யப்பட்டு அந்த அலுவலகத்தைச் சுற்றிக் கட்டப்பட்டு, அலுவலகம் இப்போதுபளிச்சென்று, கமுக்காகத் தெரியக் கூடியதாக மோஸ்தர் செய்யப்பட்டிருந்தது.

என்ன, ஏது என்று விசாரித்துப் பார்த்தால் தமிழ் எம்பி. ஒருவரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் அந்தச் சோடனை எல்லாம் நடந்திருக்கின்றனவாம்.

250 கே.வி. சூரிய சக்தி மின் இணைப்பு ஒப்பந்தம், 'பார்' புகமும் உரிமங்களை வாரித் தந்தமை போன்றவற்றுக்கு நன்றி கடனாக இப்படி நல்ல யோசனையையாவது வழங்காவிட்டால் தப்பு என்று ஆகிவிடும் அல்லவா?

## 11 இந்திய மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைது செய்யப்பட்டனர்.

யாழ். பருத்தித்துறை கடற்பரப்புக்குள் ஒரு படகில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களே நேற்று மாலை கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதான 11 இந்திய மீனவர்களும் மீன்பிடிக்கப் பயன்படுத்திய படகுடன் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## சஜித்துக்கும் அநுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2022ஆம்ஆண்டுஜூலைமாதம்அரசைப் பொறுப்பேற்றவுடன் விவசாயிகளுக்கு உரம் வழங்குவதே தான் செய்த முதல் காரியம் என்பதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அந்த 4 போகங்களையும் வெற்றியடையச் செய்ததன் மூலம் நாட்டில் நெல்



உற்பத்தியை அதிகரித்து வயல்களையும் சமையலறைகளையும் நிரப்பியதாகவும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, ஏறாவூர் அஹமட் பரீட் விளையாட்டரங்கில் நேற்று பிற்பகல் நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

முஸ்லிம்களின் ஜனாஸா நல்லடக்கம் தொடர்பில் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினை குறித்தும் இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, "விருப்பியோர் நல்லடக்கம் செய்யவும், தகனம் செய்யவும், மருத்துவ பீடத்திடம் ஒப்படைக்கவும் முடியுமான வகையில் புதிய சட்டங்களைக் கொண்டு வருவது தொடர்பான சட்ட வரைவு அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அந்த நிலைமைக்கு முகம் கொடுத்த தரப்பினருக்கு இழப்பீடு வழங்க குழுவொன்று நியமிக்கப்படும்" – என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"மக்கள் உணவு இல்லாமல் இருந்தார்கள். விவசாயம் செய்ய முடியாமல் இருந்தார்கள். உரம் இருக்கவில்லை. எரிபொருள் இருக்கவில்லை. டீசல் இருக்கவில்லை. விவசாயம் செய்ய முடியாது. வாகனம் ஓட்ட முடியாது. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. உணவு, மருந்துகள் இருக்கவில்லை. மக்கள் கஷ்டத்தில் வாழ்ந்தனர். நான் அரசைப் பொறுப்பேற்ற போது உரத்தை வழங்கி விவசாயம் செய்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று நான் தீர்மானித்தேன்.

ஐந்து போகங்களும் விதைக்கப்பட்டன. ஒரு முறைகூட கைவிடப்படவில்லை. வயலையும் நிரப்பினோம். சமையல் அறையும் நிரப்பினோம். இதுதானே மக்களின் தேவை. எரிபொருள் வழங்கினோம். மருந்துகள் இருக்கின்றன. தேவையான அனைத்துப் பொருட்களும் இருக்கின்றன. பொருளாதாரம் எழுச்சி பெறுகின்றது.

சுற்றுலாப் பயணிகளும் வருகின்றனர். வியாபாரமும் தடையின்றி நடக்கிறது. பொருட்களின் விலைகளும் குறைந்துள்ளன. இன்னும் குறைக்க வேண்டும் என்று கோருகின்றனர். அதனை ஏற்றுக் கொள்கிறேன். மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இன்னும் பொருட்களின் விலைகளைக் குறைக்க வேண்டும். ரூபாவை வலுப் பெறச் செய்ய வேண்டும்.

நான் பொறுப்பேற்கும் போது டொலர் ஒன்றின் விலை 370 ரூபாவாகும். தற்போது 300 ரூபா வரை குறைந்துள்ளது. மொத்த தேசிய உற்பத்தி 2019ஆம் ஆண்டு 89 பில்லியன் டொலர்களாக இருந்தது. ஆனால் , நான் பொறுப்பேற்ற போது 76 பில்லியன் டொலர்களாக குறைந்திருந்தது. ஆனால், 2023ஆம் ஆண்டின் இறுதியில் அது 84 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. எமது மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரித்து, பணவீக்கம் குறைந்து பொருட்களின் விலைகளும் குறைந்தன. இன்னும் நிவாரணத்தை எதிர்பார்த்துள்ளீர்கள். அதனை எப்படி வழங்கலாம்?.

தேசிய உள்நாட்டு உற்பத்தியை 89 பில்லியன் டொலர்களாக அதிகரிக்க வேண்டும். பணவீக்கத்தை 9 வீதமாக குறைக்க வேண்டும். ரூபா அப்போது இன்னும் வலுப்பெறும்.

ரூபா வலுப்பெற்றால் அதிக பொருட்களைவாங்கமுடியும்.மொத்ததேசியஉற்பத்தியை 92 பில்லியன் டொலர்களாக உயர்த்தினால் ரூபா மேலும் வலுப்பெறும். பொருட்களின் விலைகள் குறையும். யாருக்கு இந்த இலக்கை அடைய முடியும்?

உள்நாட்டு உற்பத்தியை யாருக்கு அதிகரிக்க முடியும். சஜித்தால் முடியுமா? அநுரவுக்கு முடியுமா? அவர்களால் முடியாது. எதற்காக வாக்கு கோருகின்றனர். அவர்கள் நேரத்தை வீணடிக்காது வீட்டில் இருக்க வேண்டும். வாய்ப்பு கொடுத்த போது ஓடிவிட்டார்கள். இவர்களுக்கு ஒரு நாட்டை நிர்வகிக்க முடியுமா? மக்கள் கஷ்டப்பட்டபோது தப்பியோடிவிட்டார்கள். எனக்கு ஒரேயொரு ஆசனம்தான் இருந்தது. எனினும், மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.

அதனால் நான் இதனை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறி இதனை ஏற்றுக் கொண்டேன். எமது வீடுகளிலும் குறைபாடுகள் இருந்தன. ஆனால் கஷ்டம் இருக்கவில்லை. ஆனால் மக்கள் கஷ்டப்பட்டனர். ஓட்டோ ஓட்ட முடியாமல் கஷ்டப்பட்டனர். நீங்கள் இந்த கஷ்டத்தை அனுபவித்தீர்கள்.

இவற்றைப் பார்த்தும் ஏன் இந்தத் தலைவர்கள் அனுதாபம் கொள்ளவில்லை. அரசைப் பொறுப்பேற்கச் சொன்னபோது தப்பியோடிவிட்டார்கள். நான் பொறுப்பேற்றேன்.

06 ▶



## சஜித்துக்கும் அநுர...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நான் துரோகி என்று என்னைத் திட்டுகின்றனர். திருடர்களைப் பாதுகாப்பதாக அவர்கள் குற்றங்சாட்டுகின்றனர்.

உங்களின் சமையல் அறை, பணப் பை, வீட்டில் இருந்த நிலை குறித்து அவர்கள் சிந்திக்கவில்லை. சமுர்த்தி வழங்க பணமில்லை என்றார்கள். சமுர்த்திக்குப் பதிலாக அஸ்வெசும மூலம் மூன்று மடங்கு வழங்கினேன். 24 இலட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்கினேன். உலக வங்கி எங்களுக்கு உதவியது. சில உதவிகள் தாமதமாகியுள்ளன.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு 10 கிலோ அரிசியை தலா இரண்டு மாதங்களுக்கு வழங்கினோம். பாடசாலை மாணவர்களுக்கு உணவுகளை வழங்கினோம். வேறு என்ன செய்ய வேண்டும். முதியோருக்கான கொடுப்பனை அதிகரித்தேன். இவற்றை செய்ய ஏன் அவர்கள் என்னுடன் ஒன்றுசேரவில்லை. மக்களுடன் அவர்களுக்கு கோபம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

அநுரகுமாரவுக்கும், சஜித் பிரேமதாஸவுக்கும் நீங்கள் ஏதாவது பிழை செய்துள்ளீர்களா? ஏன் அவர்கள் உதவ முன்வரவில்லை. உங்களின் பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. தங்களின் பிரச்சினகளைப் பற்றி மட்டுமே சிந்தித்தார்கள். இதனை செய்ய முடியாது. இது தோல்வியடைந்தால் தங்களின் பெயர் கெட்டுவிடும் என்று நினைத்தார்கள். தற்போது எமது முயற்சி வெற்றியளித்துள்ளது. அவர்களின் பெயர்கள் கெட்டுவிட்டன.

அவர்களுக்காகவா வாக்களிக்கப் போகிறீர்கள்? நான் 'உறுமய' காணி உறுதிப்பத்திரங்களை வழங்கினேன். கொழும்பில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு அவர்கள் வசிக்கும் அடிக்கு மாடிக் குடியிருப்புக்களின் உரிமைகளை வழங்கினோம். மலையகத்தில் கிராமங்களை உருவாக்கி, வீடுகளை வழங்குவோம்.

ஏன் அவர்கள் இவற்றை செய்ய முன்வரவில்லை. ஏன் அவர்கள் இவற்றை முன்மொழியவில்லை. ஏன் அவர்கள் இது பற்றி பேசுவதில்லை. மக்கள் வாழ்வதற்கு காணி இருக்க வேண்டும். கோரளைப் பற்று உள்ளிட்ட இந்தப் பிரதேசத்திலும் பிரச்சினைகள் இருக்கின்றன. நெருக்கடி இல்லாமல் காணிகளை அடையாளம் கண்டு காணிகளை வழங்க எமது புதிய அரசாங்கத்தில் நடவடிக்கை எடுப்போம்.

முஸ்லிம் மக்களுக்கு அநீதி ஏற்பட்டது. முஸ்லிம்களின் ஜனாசாக்கள் நல்லடக்கம் செய்ய முடியாமல் தகனம் செய்யும் நிலை ஏற்பட்டது. இவ்வாறானதொரு நிலை மீண்டும் ஏற்படாதிருக்க நான் புதிய சட்டமொன்றைக் கொண்டு வருகின்றனர். விரும்பியோர் நல்லடக்கம் செய்யவும், தகனம் செய்யவும், விரும்புவோர் உடலை மருத்துவ பீடத்துக்கு ஒப்படைக்கவும் முடியும். அமைச்சர் அலி சப்ரி இந்தச் சட்டத்தை அமைச்சரவைக்கு கொண்டு வந்த பின்னர் நாம் வர்த்தமானியில் வெளியிடுவோம்.

ஏன் சஜித், அநுர இவ்வாறான சட்டமூலத்தை கொண்டுவரவில்லை. எந்தவொரு உறுப்பினருக்கும் இந்த சட்டமூலத்தைக் கொண்டு வந்திருக்கலாம். இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவும் குழுவொன்றை நியமிக்கவுள்ளேன். கடந்த அரசாங்க காலத்தில் இது நிகழ்ந்திருந்தாலும் இந்தச் சம்பவத்திற்கு அரசு என்ற ரீதியில் முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோருகிறோம்.

சஜித், அநுர இவ்வாறு செய்வார்களா? நாம் முன்நோக்கிச் செல்ல வேண்டும். இன்னும் சில வருடங்கள் தேவைப்படுகின்றன. எங்களுக்கு உதவிகள் தேவை. ஐ.எம்.எப்., 17 நாடுகள், சீனா ஆகிய தரப்பினருடன் கதைத்து உதவிகளைப் பெற்றுள்ளேன். இந்த உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். இதனை மீறினால் நிதி கிடைக்காது. சஜித் அநுர, இந்த உடன்படிக்கைகளில் மாற்றம் செய்வோம் என்று கூறுகின்றனர்.

அவ்வாறு செய்தால் டொலர் மீண்டும் 370 ரூபா வரை செல்லும். ஆற்றில் விழுந்து சாகச் சென்றவரை காப்பாற்றி மீண்டும் கரைக்குக் கொண்டுவந்த பின்னர் மீண்டும் ஆற்றில் குதிப்பதா? அவர்கள் அதனைத்தான் செய்வதாக சொல்கின்றார்கள். நாம் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இங்குள்ளவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை வழங்க வேண்டும். இது ஆரம்பம் மட்டுமே. நாம் முன்நோக்கிப் பயணிக்க வேண்டும். அதனால்தான் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றேன். உங்களின் எதிர்காலத்தை பற்றி சிந்தியுங்கள். இதனை பாதுகாத்துக் கொள்ள காஸ் சிலிண்டருக்கு வாக்களிக்குமாறு கோருகின்றேன். அல்லது காஸ் சிலிண்டர் இன்றி வாழ நேரிடும்." – என்றார்.

## உயர்நீதிமன்றத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலைத் தாமதப்படுத்தியது தவறான நடவடிக்கை என்றும், உயர்நீதிமன்றம் இதனை உறுதி செய்துள்ளமை நீதியை நோக்கிய முக்கியமான நடவடிக்கை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு ஆச்சரியமளிக்கும் ஒன்றல்ல. தேர்தல்களைப் பிற்போடுவது, ஒத்திவைப்பது மக்களின் உரிமைகளை மீறும் செயல் என்று உயர்நீதிமன்றம் தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்துள்ளது. தீர்ப்பு தாமதமானாலும் இறுதியாக நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது என நான் கருதுகின்றேன். ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தும் என எதிர்பார்க்கின்றேன்." – என்றும் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ்ப் பொதுக்கட்டமைப்பை பேச்சுக்கு அழைத்த ஜனாதிபதி



வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்கியுள்ள தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பைப் பேச்சுக்கு அழைத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இது தொடர்பான கடிதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பத்துடன் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அழைப்பையேற்று தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு பேச்சுக்குச் செல்லுமா என்பது தொடர்பில் தெரியவரவில்லை.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தமிழர் வேண்டுவது

தேர்தல் என்றதும் அரசியல்வாதிகள் தத்துவம் பேசுவார்கள். நியாயம் உரைப்பார்கள். யாருடைய வாக்குகளைக் கவர வேண்டுமோ அவர்களுக்கு சார்பாக நியாயம், நீதியும் கூட வலியுறுத்துவார்கள். இந்த விவகாரத்தில் முன்னைய தேர்தல்களை விட இந்த ஜனாதிபதித் தேர்தல் வித்தியாசமானது.

இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் நாம் சுட்டிக் காட்டியபடி வழமைக்கு மாறாக இந்தத் தடவை நான்கு முனைப் போட்டி. முன்னர் எல்லாம் இருமுனைப் போட்டிதான். அப்போதெல்லாம் நாட்டின் பெரும்பான்மையினரான சிங்களவர்களை கவர்ந்தால் அந்த வாக்குகளிலேயே ஜனாதிபதித் தேர்தலில் வென்று விடலாம் என்ற நிலைமை. அதனால் ஒவ்வொரு தேர்தலிலும் பேரினவாதம் - சிங்கள, பௌத்த வெறித்தனம் - பெருக்கெடுத்து ஓடும். கடந்த ஜனாதிபதித் தேர்தல் வரை அதுதான் நிலைமை.

ஆனால, இந்தத் தடவை களநிலமை அதுவல்ல. நான்கு முனைப் போட்டி. சிறுபான்மையினரான வடக்குக் கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோரின் வாக்குகளும் இறுதி முடிவைத் தீர்மானிப்பதில் கணிசமான பங்கை வகிக்கும் என்பது உறுதி.

அதனால் நான்கு முனைப் போட்டியின் இடையே தீவிரமாக இருக்கும் மூவர் - ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க ஆகிய மூவர் - சிறுபான்மையினர் வாக்குகளிலும் கண் வைத்துள்ளனர்.

நான்காவது வேட்பாளரான மொட்டுவின் பிரதிநிதி நாமல் ராஜபக்ஷ மட்டும் மற்றைய மூன்று வேட்பாளர்களும் இடைவெளி விட்டு வைத்திருக்கும் பௌத்த - சிங்களத் தீவிரப் போக்குடைய பேரினவாதத் தளத்துக்குள் கிடைத்ததைச் சுருட்டுவோம் என்ற இலக்கில் காய் நகர்த்துகின்றார். பேரினவாத நிலைப்பாட்டை எடுத்துத் தம்மை வெளிப்படுத்துகின்றார்.

ஆனால், மற்றைய மூவரும் சமய சமரசம் பேசுகின்றனர். இன நல்லிணக்கம் குறித்து உபதேசிக்கின்றார்கள். மொழிச் சமத்துவம் பற்றி பாடம் எடுக்கின்றார்கள்.

இந்த வரிசையில் சஜித் பிரேமதாஸவும் போதனை வழங்கியிருக்கின்றார்.

"அனைத்து இனங்களிலும், அனைத்து மதங்களிலும் அடிப்படைவாதிகள் இருக்கின்றார்கள். அது ஒரு மதத்தோடும் ஓர் இனத்தோடும் மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதில்லை. நாம் அனைத்து மதங்களுக்கும் இனங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். அனைவரும் ஒன்றாகக் கைகோர்த்து சகோதரத்துவத்துடனும் நட்புடனும் செயற்பட வேண்டும். இது ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையாக இருக்கின்றது" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா கூறியிருக்கின்றார்.


அவருக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று நேற்று கொழும்பிலுள்ள உலமா சபை தலைமையகத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

நல்லது. ஆனால் வடக்கு, கிழக்கு தமிழர்கள் வேண்டுவது இந்த சமரசத்தை - இணக்கத்தை - சமத்துவத்தை - மட்டும் அல்ல. அதையும் தாண்டிய ஒரு விடயத்தை.

இந்த இலங்கைத் தீவின் தெற்கில் நீண்ட நெடுங்காலமாக பௌத்தம் நிலை பெற்றிருக்கின்றது. சிங்கள இனம் ஒரு தேசிய இனமாக வாழ்ந்து வருகின்றது. அதனால் இலங்கையின் அரசமைப்பில் பௌத்தத்திற்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அதுபோலவே இலங்கைத் தீவின் வடக்கையும் கிழக்கையும் தமது பூர்வீகத் தாயகமாகக் கொண்ட தமிழ் தேசிய இனம் பல்லாயிரம் ஆண்டுகளாக இங்கு வாழ்ந்து வருகின்றது. அந்தத் தாயகத்தில் அவர்களது மதம், மொழி, கலாசாரம், வழக்காறுகள் மற்றும் வாழ்வியல் முறைகள் தனித்துவமாகப் பேணப்பட ஒரு முறைமை தேவை.

அது சஜித்தும் மற்றவர்களும் உரைக்கும் இலங்கை முழுவதுக்குமான சமரசம் - சமத்துவம் - நல்லிணக்கம் - போன்றவற்றை எல்லாம் தாண்டியது என்பதை சஜித் பிரேமதாஸ உட்பட தென்னிலங்கைத் தலைவர்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.




# உலக அமைதியையும் செழிப்பையும் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து உறுதி செய்ய முடியும்

## வொஷிங்டனில் ராஜ்நாத் சிங் உரை

உலக அமைதியையும், செழிப்பையும் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து உறுதி செய்ய முடியும் என்று இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

4 நாள்கள் பயணமாக அமெரிக்க தலைநகர் வொஷிங்டன் சென்றடைந்த ராஜ்நாத் சிங், அங்குள்ள இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உலகில் அமைதி, வளம் மற்றும் நிலைத்தன்மையை உறுதி செய்யக்கூடிய வலிமையான சக்திகளாக இந்தியாவும், அமெரிக்காவும் திகழ்கின்றன. இந்தியாவும், அமெரிக்காவும் இயற்கையான நட்பு நாடுகள். வலுவான கூட்டாளிகளாக இருக்க இரு நாடுகளும் தீர்மானித்துள்ளன. இந்த ஒத்துழைப்பு தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

உலக அமைதியையும், செழிப்பையும் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து உறுதி செய்ய முடியும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ், உலக அரங்கில் இந்தியாவின் அந்தஸ்து வளர்ந்துள்ளது. முன்பு, சர்வதேச அரங்குகளில் இந்தியாவின் வார்த்தைகள் கவனிக்கப்படவில்லை. ஆனால் இன்று, ஒட்டுமொத்த உலகமும் கூர்ந்து கவனிக்கிறது.

2014 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்தியா 'பலவீனமான ஐந்து' நாடுகளில் ஒன்றாக இருந்தது. இன்று உலகின் 'அற்புதமான ஐந்து' பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா தன்னைக் காண்கிறது. 2027 ஆம் ஆண்டில் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக மாறும் என்று முதலீட்டு நிறுவனமான மோர்கன் ஸ்டான்லியின் சமீபத்திய அறிக்கை தெரிவித்துள்ளது. கொவிட் 19 தொற்றுநோய்க்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கையால், மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியப் பொருளாதாரம் மோசமாக பாதிக்கப்படவில்லை.

25 கோடி மக்களை அரசு வெற்றிகரமாக வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டு வந்துள்ளது. சமீபத்திய தரவுகளின்படி, சில்லறை பணவீக்கம் ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 3.54 வீதமாக குறைந்துள்ளதுடன், அந்நியச் செலாவணி கையிருப்பும் இதுவரை இல்லாத அளவுக்கு 675 பில்லியன் டாலரை எட்டியுள்ளது.

பாதுகாப்புத் துறையில் தற்சார்பை அடைய அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாக 5,000-க்கும் மேற்பட்ட பொருட்கள் நேர்மறையான சுதேசி மயமாக்கப்பட்டிருக்கின்றன. உள்நாட்டு நிறுவனங்களால் அதிநவீன பாதுகாப்பு சாதனங்கள் இந்திய மண்ணில் தயாரிக்கப்படுவதை உறுதி செய்ய, நிலையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போதைய அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 600 கோடி ரூபாவாக இருந்த பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி, தற்போது கணிசமாக உயர்ந்து 21,000 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது. புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக, நாட்டில் 2014 இல் 400 ஆக இருந்த புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை, தற்போது 1.20 லட்சமாக உயர்ந்துள்ளது. இந்த சாதனைகளுக்கு அரசின் கொள்கைகள் மற்றும் திட்டமிடலுடன் கூடிய மன உறுதியே காரணம். பிரதமரின் தொலைநோக்குப் பார்வையின்படி, இந்தியாவை ஒரு வலுவான, பாதுகாப்பான மற்றும் வளமான தேசமாக உருவாக்க நாங்கள் விரும்புகிறோம்."- என்றார்.




## இந்தியாவின் திரிபுராவில் வெள்ளம்:

# இதுவரையில் 22 பேர் உயிரிழப்பு, 65 ஆயிரம் பேர் முகாம்களில் தஞ்சம்

இந்தியாவின் திரிபுராவில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இதுவரை 22 பேர் உயிரிழந்துள்ளனர். 65 ஆயிரம் பேர் இருப்பிடங்களை விட்டு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

வட கிழக்கு மாநிலமான திரிபுராவில் இந்த வார தொடக்கத்தில் இருந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் பல பகுதிகளில் நிலச்சரிவு மற்றும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்த மழையால் இதுவரை மாநிலம் முழுவதும் 17 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி இதுவரை 22 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 450 நிவாரண முகாம்களில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அகர்தலாவை சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தில் சிக்கித் தவித்த மக்களுக்கு விமானம் மூலம் உணவு, அத்தியாவசிய பொருள்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக மாநிலம் முழுவதும் பாடசாலைகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த 10 பேரின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபா நிவாரணம் வழங்கப்படும் என்று திரிபுரா முதல்வர் மாணிக் சாஹா அறிவித்துள்ளார்.



# மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் விஜய்யின் த.வெ.க. கொடியை வைத்து கட்சியினர் வழிபாடு

நடிகர் விஜய் நேற்று முன்தினம் அறிமுகம் செய்த த.வெ.க. கட்சியின் கொடியை மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் வைத்து அவரது கட்சியினர் சிறப்பு வழிபாடு நடத்தினர்.

நடிகர் விஜய் கடந்த பெப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற புதிய அரசியல் கட்சியை தொடங்கினார். இக் கட்சிக்கான அதிகாரப்பூர்வ கொடி மற்றும் கட்சிப் பாடலை நேற்று சென்னை பனையூரில் விஜய் அறிமுகப்படுத்தினார்.

இதைத்தொடர்ந்து மதுரை உட்பட தமிழகம் முழுவதும் அவரது கட்சியினர் இனிப்பு வழங்கியும், பட்டாசு வெடித்தும் கொண்டாடினர்.

இந்த நிலையில், விஜய் கட்சியின் கொடியை பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் வைத்து வழிபாடு நடத்த அக்கட்சியினர் திட்டமிட்டனர்.





# உக்ரைன் போரில் உயிரிழந்த குழந்தைகளுக்கு பிரதமர் மோடி, உக்ரைன் ஜனாதிபதி அஞ்சலி

உக்ரைன் சென்றுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி, கீவ் நகரில் அந்த நாட்டு ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் இணைந்து, போரில் உயிரிழந்த குழந்தைகளின் நினைவிட பகுதியில் அஞ்சலி செலுத்தினார்.

பிரதமர் நரேந்திர மோடி வரலாற்றுச் சிறப்புமிக்க பயணமாக போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனுக்குச் சென்றுள்ளார். போலந்து தலைநகர் வார்சாவில் இருந்து ரயில் மூலம் நேற்றுக் காலை தலைநகர் கீவ் சென்றடைந்தார். உக்ரைன் உயரதிகாரிகள், பிரதமர் மோடியை ரயில் நிலையத்துக்கு சென்று வரவேற்றனர். மேலும், அங்குள்ள இந்தியர்கள் தேசியக் கொடியுடன் கூடி பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்

இதனைத் தொடர்ந்து கீவ் நகரில் உள்ள மகாத்மா காந்தியின் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'கீவில் மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தினேன். காந்தியின் லட்சியங்கள் உலகளாவியவை மற்றும் லட்சக்கணக்கானவர்களுக்கு நம்பிக்கை அளிப்பவை. மனித குலத்துக்கு அவர் காட்டிய வழியை நாம் அனைவரும் பின்பற்றுவோம்' என தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ஜெலென்ஸ்கியை பிரதமர் மோடி சந்தித்தார். அப்போது, ஜெலென்ஸ்கி, மோடியை ஆரத்தழுவி வரவேற்றார். இதனைத் தொடர்ந்து இருவரும் தியாகிகள் நினைவிடத்தில் போரில் உயிரிழந்த குழந்தைகளின் நினைவாக அஞ்சலி செலுத்தினர். ஜெலென்ஸ்கி தோள்களில் கைகளைப் போட்டவாறு பிரதமர் மோடி ஆறுதல் தெரிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக, ரஷ்யா – உக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து இருவரும் ஆலோசிக்க உள்ளனர்.

முன்னதாக நேற்று முன்தினம் போலந்தில் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "உக்ரைன் மற்றும் மேற்கு ஆசியாவில் நடந்து வரும் மோதல்கள் நம் அனைவருக்கும் ஆழ்ந்த கவலை அளிக்கும் விஷயமாகும். போர்க்களத்தில் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்பது இந்தியாவின் உறுதியான நம்பிக்கை.

எந்தவொரு நெருக்கடியிலும், அப்பாவி மக்களின் உயிரிழப்பு ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கும் மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது. அமைதி மற்றும் நிலைத்தன்மையை விரைவில் மீட்டெடுப்பதற்கு பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திர செயல்பாடுகளை நாங்கள் ஆதரிக்கிறோம். இதற்காக, இந்தியா, அதன் நட்பு நாடுகளுடன் சேர்ந்து, சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்கத் தயாராக உள்ளது." என தெரிவித்திருந்தார்.





# நைஜீரியாவில் ஆயுததாரிகளால் 13 விவசாயிகள் கொலை

நைஜீரியாவின் வட மத்திய பகுதியில் ஆயுததாரிகள் 13 விவசாயிகளைக் கொன்றுள்ளனர் என அந்த நாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தக் கொலைகளுக்கு இதுவரை எந்தக் குழுவினரும் உரிமை கோரவில்லை.

துப்பாக்கிதாரிகளின் நடமாட்டம் குறித்து புலனாய்வு அமைப்புகளுக்குத் தகவல் வழங்கினார்கள், என்ற சந்தேகத்தில் விவசாயிகள் கொல்லப்பட்டிருக்கலாமென பொலிஸார் கருதுகின்றனர்.

நைஜீரியாவின் வடமத்திய பகுதியில் கால்நடை மேய்ப்பவர்களுக்கும், கிராமப்புற விவசாயிகளுக்கும் இடையே தண்ணீர் மற்றும் நிலம் என்பனவற்றைக் கட்டுப்பாட்டில் வைப்பதற்காக அடிக்கடி மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.






# வட்டுக்கோட்டை துணைவி ஆலயத்தை மீள்உருவாக்கம் செய்யும் பணி ஆரம்பம்

2016 ஆம் ஆண்டு அழிவடைந்த நிலையில் அடையாளம் காணப்பட்ட வட்டுக்கோட்டை துணைவி ஆலயத்தினை மீள்உருவாக்கம் செய்யும் பணி யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள்பேராசிரியர் புஷ்பரட்ணம் தலைமையில் நேற்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆழிவடைந்த இந்த ஆலயத்தின் எஞ்சிய பாகங்களையும் அத்திவாரங்களையும் அழிபாடுகளையும் கொண்டு இவ்வாலயமானது கற்பகிரகம், அந்தராளம், முன்மண்டபம், துணைக்கோவில்கள், சுற்றுமதில், மடங்கள், கேணி என்பவற்றை கொண்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்த முடிகின்றது.

அத்துடன் இவ்வாலயத்தின் கற்பக்கிரகத்தின் பின்புறத்தில் பொறிக்கப்பட்ட கிரந்த எழுத்து சாசனத்தின் அடிப்படையாகக் கொண்டு இவ்வாலயமானது 400 வருடங்கள் பழமைவாய்ந்த ஆலயமென்பதுடன் இவ்வாலயத்தின் பெயர் பிரகேதீஸ்வரர் என்பதனையும் இக் கல்வெட்டில் இருந்து உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

மிகத் தொன்மையான எமது முன்னோர்களின் வழிப்பாட்டுத்தலமான இவ்வாலயம் பல ஆண்டு காலம் கவனிப்பார் இன்றிக் காணப்பட்ட நிலையில் அதனை மீள்உருவாக்கம் செய்வதற்கு நீண்ட காலம் முயற்சி எடுக்கப்பட்டது.

இந் நிலையில் தற்போது அமெரிக்காவில் வசிக்கின்ற கைதடியினைச் சேர்ந்த கலாநிதி சிவயோகநாதனின் மகள் பாலயோகஸ்தினி சிவயோகநாதன் இவ்வாலயத்தினை பழைய நிலைக்கு மீள் உருவாக்கம் செய்வதற்குரிய நிதியுதவியினை வழங்கியுள்ளார்.

அதன்டிப்படையில் இவ்வாலயத்தினை பழைய நிலைக்கு மீள் உருவாக்கம் செய்வதற்குரிய திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ்ப்பாண மரபுரிமைய மையத்தினரால் இவ் வாலயம் மீளுருவாக்கம் செய்யப்படவுள்ளது.

மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் தலைமையில் நடைபெற்ற சம்பிரதாயபூர்வமாக ஆரம்ப நிகழ்வில் இவ்வாலயத்தினை மீள்உருவாக்கம் செய்வதற்குரிய நிதி உதவியினை வழங்கவுள்ள பாலயோகஸ்தினி சிவயோகநாதன் அவர்களின் தந்தை கலாநிதி சிவயோகநாதன், தொல்லியல் திணைக்களகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் பந்துலு, இவ்வாலயத்தினை மீளுருவாக்கம் செய்யும் முக்கிய பணியில் இருக்கும் கபிலன், செல்வி துஷ்யந்தி, யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உறுப்பினர் பார்த்திபன், மற்றும் யாழ்ப்பாண பல்கலைக் கழக முகாமைத்துவ பீட முன்னாள் உத்தியோகத்தர் .நாக ஜெயக்குமார் உட்பட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.












# ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்புக்காக 12 நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 12 நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு உள்ளிட்ட நாடுகளுக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு உள்ளிட்ட சகல செயற் பாடுகளையும் அவதானித்து அறிக்கை யொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளனர் என ரத்நாயக்க தெரி வித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர் தலை கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப் பாளர்கள் ஏற்கனவே நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

அத்துடன், பொதுநலவாய நாடு களின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் பிரதிநிதிகளும் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப் பிற்காக நாட்டிற்கு வருகை தரவுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மதங்கள் கடந்து பணியாற்றுகிறது செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம்!

## முதல்வர் மோகன் சுவாமிகள் விளக்கம்

செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம் மதங்களைக் கடந்து இலங்கையின் பல பாகங்களிலும் கஷ்டப்படுபவர்களுக்கு உதவிகளை வழங்கி வருவதாக ஆச்சி ரம முதல்வர் மோகன் சுவாமிகள் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து அன்னதான பணியில் இணைந்து கொண்ட நான் எனது குருநாதரின் வழிநடத்தலில் சந்நிதியான ஆச்சி ரமத்தை வழிநடத்தி வருகிறேன்.

இங்கு நான் முதலாளி அல்லன். முருகன் தான் முதலாளி. அள்ளித் தருகி றான் ஏழைகளுக்கு. இல்லை என்று வருபவர்களுக்கு அவன் அருளால் அள்ளி வழங்கி வருகிறோம்.

யுத்த காலத்தில் துவிச் சக்கர வண்டி மூலம் நெல்லு பெற்று உரலில் போட்டு, கோது நீக்கி, முருகனை நாடிவரும் அடியவர்களுக்கு உணவு சமைத்து வழங்கினோம்.

நாம் யாரிடமும் அன்னதானத்துக்கு பணம் தாருங்கள் அல்லது எங்கள் ஆசிரமத்துக்கு உதவி செய்யுங்கள் என கேட்டது கிடையாது.

ஆனாலும் எமது ஆரம்ப காலத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய நான்கு அல்லது ஐந்து பேரிடம் உதவிகளைப் பெற்று ஆசிரமத்தை நடத்தி வந்தோம்.

இன்று மரம் பழுத்து பழமாக உள்ள நிலையில் பலரும் உதவி செய்கிறார்கள்




ஆனாலும் எம்மை முன்பு வளர்த்து விட்டவர்களை நான் ஆத்திரமத்தில் இருப்பவர்களுக்கு கூறியிருக்கிறேன் – அவர்களுக்கு எக்காலத்திலும் நான் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும் என்று.

முருகனின் ஆச்சிரமத்தில் தினமும் 60க்கும் மேற்பட்ட முதியவர்களுக்கு மூன்று நேர உணவு, தேநீர் வழங்கப் பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாது, வாரத்தில் ஏழு நாட்களும் முருகனை நாடிவரும் அடியவர்களுக்கு இல்லை என்று கூறாமல் உணவு வழங்கி வருகிறோம்.

எமது ஆசிரமத்தால் இலங்கையில் உள்ள பல பாகங்களிலும் வறியப்பட்ட மக்களுக்கு அவர்களது பிரதேசம் சென்று உணவுப் பொருள்கள், மருத்துவ உப கரணங்கள், பாடசாலை மாணவர்களுக் கான உதவி திட்டங்கள் எனப் பல்வேறு அறப்பணிகளை ஆற்றி வருகிறோம்.

கொரோனா இடர் காலப்பகுதியில் பல வைத்திய சாலைகளுக்கு மருந்து பொருள்களை வழங்கியமையோடு முடக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சமைத்த உணவுகளையும் வழங்கினோம்.

சந்நிதியான் ஆச்சிரமம் மதங்களைக் கடந்து அறப்பணிகளை ஆற்றி வரு கிறது.

எமது ஆசிரமத்தில் முஸ்லிம், கிறிஸ் தவப் பிள்ளைகள் உணவருந்து கிறார்கள். அவர்களின் கல்விக்கு தேவை யான உதவி திட்டங்களை வழங்கி வருகிறோம். – என்றார்.

# கிளப் வசந்தவைக் கொலை செய்த துப்பாக்கிதாரி உட்பட 2 பேர் கைது



கிளப் வசந்த கொலையில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட கௌடான பிரதேசத்தில் வைத்து 31 வயதான பட்டி ஆரம்பகே அஜித் றொஹண என்பவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், அத்துருகிரிய பிரதேசத்தில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து, துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களைப் பஸ்ஸில் கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்ற 29 வயதான நடிகர் வருண இந்திக்க சில்வாவும் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனுடன், ரி -56 ரகத் துப்பாக்கி, 120 தோட்டாக்கள் மற்றும் 9மி.மீ. பிஸ்டல் தோட்டாக்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



# வீரமணி யாழ் வந்தார் மாவை வரவேற்றார்




இந்தியாவில் இருந்து திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கி.வீரமணி யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக இன்று நண்பகல் அவர் யாழ். வந்தடைந்தார்.

வீரமணியை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.

அ.அமிர்தலிங்கத்தின் 97 ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரை நிகழ்வில் பங்கேற்க வீரமணி இலங்கையை வந்தடைந்தார்.











# இலங்கையில் கால் பதிக்கும் புதிய பெற்றோலிய நிறுவனம்

ஆஸ்திரேலியாவின் யுனைட் பெற்றோலிய நிறுவனம் அடுத்த மாதம் முதல் இலங்கையில் எரிபொருள் விநியோகச் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நிறுவனத்தினர் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் எரிபொருளை விநியோகிக்கவுள்ளனர்.

இதற்கமைய இலங்கைக்குள் பிரவேசித்துள்ள எரிபொருள் விநியோகம் தொடர்பான நான்காவது வெளிநாட்டு நிறுவனமாக யுனைட் பெற்றோலிய நிறுவனம் கருதப்படுகிறது.

இதுவரை இந்தியாவின் ஐ.ஓ.சி, சீனாவின் சினொபெக், அமெரிக்காவின் ஷெல் போன்ற நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருள் விநியோகப் பணிகளை முன்னெடுக்கின்றன.

அந்த பட்டியலில் தற்போது ஆஸ்திரேலியாவின் யுனைட் பெற்றோலிய நிறுவனமும் இணைந்துள்ளது.

# நிகழ்நிலைக் காப்பு திருத்தச் சட்டமூலத்துக்கு எதிரான உயர்நீதிமன்ற விசாரணைகள் நிறைவு

நிகழ்நிலை காப்பு சட்டம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டமூலத்துக்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணைகள் உயர்நீதிமன்றில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய, மேற்படி விசாரணை தொடர்பான வியாக்கியானம் சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்தச் சட்டமூலத்தைச் சவாலுக்கு உட்படுத்தி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் உள்ளிட்ட தரப்பினர் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இதற்கமைய, இந்த வழக்கு ஏ.எச்.எம்.டி.நவாஸ், ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய நீதியரசர்கள் அடங்கிய உயர்நீதிமன்ற ஆயம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# தலதா அத்துகோறளையின் ஆசனம் வெற்றிடமாகியுள்ளது

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நாடாளுமன்ற செயலர் அறிவிப்பு

தலதா அதுகோறளை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தமையை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

இரத்தினபுரி தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோறளை 2024 ஒகஸ்ட் 21ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளமையால் ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவருக்கான வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(1) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# போலியான தகவல்களைச் சமர்ப்பிக்கும் வேட்பாளர்களின் குடியுரிமை இரத்தாகும்

## தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை



"ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு முடிவடைந்து 21 நாள்களுக்குள் தேர்தல் செலவினங்கள் தொடர்பான உறுதிப் படுத்தப்பட்ட தகவல்களை வழங் காத மற்றும் போலியான தகவல் களை முன்வைக்கும் வேட்பாளர்க ளின் குடியுரிமை மூன்று ஆண்டுக ளுக்கு இரத்து செய்யப்படும். தேர்தல் செலவினங்கள் ஒழுங்குப்படுத்தல் சட்டத் துக்கமைய அனைத்து வேட்பாளர் களும் செயற்பட வேண்டும்."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைய ாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின் போது அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல் பிரச்சார செலவினங்கள் தொடர்பான சட்டம் 1946 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தேர்தல் சட்டத் துக்கு அமைய செயற்படாதவர்களின் பதவி நிலைகளும் நீதிமன்றத்தின் தீர்ப்பின் ஊடாக இரத்துச் செய்யப் பட்ட வரலாற்றுப் பதிவுகளும் காணப் படுகின்றன.

தேர்தல் கட்டமைப்பில் விருப்பு வாக்கு முறைமையை அறிமுகப்படுத் தப்பட்டவுடன் நிதியை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் செயற்பாடுகளை தீர்மானிக்கும் செயற்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. வாக்காளர்களும் தமக்கு என்ன கிடைக்கும் என்பதை கருத்திற் கொண்டு தேர்தலை தீர்மானிக்கும் நிலை தோற்றம் பெற்றது.

தேர்தல் காலத்தில் நிதி பரிமாற் றம் தீவிரமடைந்ததன் பின்னர் அரசி யல்வாதிகளுக்கும் வாக்காளர்களுக் கும் இடையிலான சமூக ஒப்பந்தம் பல வீனமடைந்து. வியாபார நிலைமை தோற்றம் பெற்றுள்ளது. வேட்பாள ருக்கும் வாக்காளருக்கும் இடையிலான உறவு வியாபாரிக்கும், நுகர்வோருக்கும் இடையிலான உறவாக மாற்றமடைந் துள்ளமை கவலைக்குரியது.

இவ்வாறான பின்னணியில் தேர் தல் காலத்தில் அரசியல்வாதிகள் தேர் தல் பிரச்சாரத்துக்காக செலவு செய்ய வேண்டிய நிதி தொடர்பில் ஒரு வரை யறையை கொண்டு வர வேண்டும் என்பதற்காக 2010 ஆம் ஆண்டு தேர்தல் செலவினங்களை ஒழுங்கு படுத்தல் சட்டம் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டு பாரிய போராட்டத் துக்கு மத்தியில் 2023 ஆம் ஆண்டு தேர்தல் செலவினங்களை ஒழுங்கு படுத்தல் சட்டம் இயற்றப்பட்டது.

2023 ஆம் ஆண்டு நடத்த உத் தேசிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தேர்தல் செலவினங்களை ஒழுங்குப்படுத் தும் சட்டத்தை செயற்படுத்த எதிர்பார்த் திருந்தோம். இருப்பினும் நிதி நெருக்கடி காரணமாக தேர்தலை நடத்த முடிய வில்லை. உள்ளூராட்சிமன்றத் தேர் தல் குறித்து உயர்நீதிமன்றம் தற்போது தீர்ப்பளித்துள்ளது. தீர்ப்பினை அடிப் படையாகக் கொண்டு செயற்படுவது குறித்து கலந்துரையாடியுள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளன. தேர்தல் செலவினங்களை கண்காணிக் கும் சட்டத்துக்கு அமைய வாக்காளர் ஒருவருக்கு வேட்பாளர் ஒருவர் பிரசாரச் செலவுக்காக 109 ரூபாவை செலவழிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே அனைத்து வேட்பாளர்களும் இந்த தொகைக்கு உட்பட்ட வகையில் செயற்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு நிறைவடைந்து 21 நாள்களுக்குள் 38 வேட்பாளர்களும் தமது தேர்தல் பிரச்சார செலவினங்கள் தொடர்பிலான உறு திப்படுத்தப்பட்ட ஆவணங்களை தேர் தல்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஆவணங்களை சமர்ப்பிக் காத மற்றும் போலியான ஆவணங் களை சமர்ப்பிக்கும் வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மூன்று ஆண்டுகள் தேர்தலில் வாக்களிப்பதற்கும்,வாக்கு கோருவ தற்கும் தடை விதிக்கப்படும். அதனுடன் குடியுரிமையை இழக்க நேரிடும்.ஆகவே சகல வேட்பாளர்களும் அவர்களுக்கு ஆதரவு வழங்கும் தரப்பினரும் தேர் தல் செலவினங்களை ஒழுங்குபடுத் தும் சட்டத்துக்கு அமைய செயற்பட வேண்டும்."– என்றார்.




தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின்
97வது பிறந்தநாள் நினைவுப்பேருரை

தலைவர்
திரு. இ.த. விக்னராசா
(ஓய்வு நிலை மேல் நீதிமன்ற நீதிபதி)

நினைவுப் பேருரை
உயர்திரு கி. வீரமணி
(தலைவர் திராவிடர் கழகம், தமிழ்நாடு)

சிறப்புரை
அதி வண கலாநிதி V. பத்மதயாளன்
(ஆயர் தென்னிந்திய திருச்சபை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இடம்: ரிம்மர் மண்டபம் (வேம்படி வீதி யாழ்ப்பாணம்)
காலம்: 24-08-2024 சனிக்கிழமை
நேரம்: மாலை 3.00 மணி

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை
Amirthalingam Memorial Foundation
Moolai, Chulipuram, Jaffna, Sri Lanka

தொடர்புகளுக்கு
0775274300 / 0774033471 / 0777279238

# ஐ.தே.கவை பிளவுபடுத்த முன்னின்று செயற்பட்ட தலதா இப்போது முதலைக் கண்ணீர் வடிகின்றார்

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு



"ஐக்கிய தேசிய கட்சியை பிளவுபடுத்தி சஜித் பிரேமதாஸ தலைமையில் கட்சி அமைக்க பிரதானமாக செயற்பட்ட தலதா அத்துகோறளை தற்போது கட்சி பிளவு பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது என முதலைக்கண்ணீர் வடிக்கிறார்."

– இவ்வாறு முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றிவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டுச்சென்றமை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஐக்கிய தேசிய கட்சிக்குள் தலைமை பதவி தொடர்பில் பிரச்சினை வந்தபோது, சஜித் பிரேமதாஸவுக்குத் தலைமைப் பதவி வழங்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தவர்களில் தலதாவும் ஒருவர். ஐக்கிய தேசிய கட்சியில் சஜித் பிரேமதாஸவுக்கு தலைமை பதவி கிடைக்காத நிலையில் கட்சியில் இருந்து வெளியேறி, சஜித் பிரேமதாஸ தலைமையில் புதிய கட்சி ஒன்றை உருவாக்கவும் அவர் முன்னிருந்து செயற்பட்டார். அதனால் நாடாளுமன்றத்தில் அவர் தெரிவித்த கருத்து பொய் என்பதை அவரின் மனசாட்சி சொல்லும்.

ஐக்கிய தேசிய கட்சியை பிளவுபடுத்தி, தற்போது தலைவர்கள் இரண்டுபேரும் இரண்டு முனைகளில் போட்டியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவிப்பது, புதுமையாக இருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க தனது ஜனாதிபதி கனவுக்காக, ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கை, சின்னம் என அனைத்தையும் விட்டு, இனவாதிகளுடனும், திருடர்களுடனும் கைகோர்த்துக் கொண்டுள்ளார்.

அதேபோன்று மஹிந்தானந்த, பிரசன்ன ரணதுங்க, ரோஹித்த அபேகுணவர்த்தன போன்றவர்கள் தங்களின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ என்றே தற்போதும் தெரிவிக்கின்றனர். அவ்வாறு இருக்கும்போது ரணில் விக்கிரமசிங்கவுடன் எவ்வாறு கைகோர்த்துக் கொள்ள முடியும் எனக் கேட்கிறோம்.

அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் தற்போது மோசடிக்காரர்கள் இணைந்துகொண்டுள்ளனர் எனத் தெரிவித்திருந்தார். எங்களுடன் இணைந்துகொண்டுள்ளவர்களில் யாருக்காவது மோசடி குற்றச்சாட்டு இருக்கிறதா? அல்லது நீதிமன்றத்தால் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் இருக்கின்றனரா எனக் கேட்கிறோம்.

ஆனால் அவர் தெரிவிக்கும் மோசடிக்காரர்கள் அனைவரும் ரணில் விக்கிரமசிங்கவுடனே இருக்கிறனர். மஹிந்தானந்த அளுத்கமகே "டொப் டென்" எனப் பத்து பேரின் பெயரை குறிப்பிட்டு எமது அரசாங்கத்தில் இருந்த அமைச்சர்களுக்கு எதிராக மோசடிக் குற்றச்சாட்டு தெரிவித்து வந்தார். அந்த பத்துப் பேரில் ஆரம்பமாக இருந்தது தலதா அத்துகோறளையின் பெயராகும். தலதா மோசடிகாரர் எனக் குற்றம் சாட்டிய மஹிந்தானந்தவும் தற்போது ரணில் விக்கிரமசிங்கவுடனேயே இருக்கிறார்.

எனவே கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தனித்து போட்டியிடும்போது தலதா அத்துகோறளை ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டே வெற்றிபெற்றார். அப்போது கட்சி பிளவுபடுவதை கண்டுகொள்ளாத அவர் தற்போது ஐக்கிய தேசிய கட்சி பிளவுபட்டிருப்பதாக முதலைக்கண்ணீர் வடிக்கிறார்."– என்றார்.

# கள்ளுக்கு விலை போகின்றவர்கள் அல்லர் தோட்டத் தொழிலாளர்கள்

## இடித்துக் கூறுகின்றார் திகாம்பரம் எம்.பி.




தேர்தலை இலக்கு வைத்து நுவரெலியா மாவட்டத்தில் தரங்குறைவான கள் விநியோகிக்கப்படுவதாகத் தேர்தல் திணைக்களத்துக்கு முறைபாடு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுவதை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித்தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

தரங்குறைந்த கள் விநியோகத்தின் மூலம் தேர்தல் சட்டம் மீறப்படுகின்றமை தொடர்பில் பொலிஸார் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக அறிவுறுத்தியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை வண்மையாகக் கண்டிப்பதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித்தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயத்தில் சகல கட்சிகளும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படும்!



## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

தங்களது அரசாங்கத்தில் சகல அரச பணியாளர்களுக்கும் கொடுப்பனவுகள் அடங்கலாகக் குறைந்தபட்ச சம்பளமாக 57, 500 ரூபாய் வழங்கப்படும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அந்த அளவில் சம்பளத்தை அதிகரிப்பதற்காக ஐக்கிய மக்கள் கூட்டணி அரசாங்கம் செயற்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரக்காபொல பகுதியில் நேற்று இடம்பெற்ற பிரச்சார கூட்டத்தில் கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி சகல மக்களும் இணைந்து சாதாரண மக்களுக்கான ஒரு யுகத்தை உருவாக்குவார்கள் என்றார்.

அப்போது நாட்டில் உள்ள அரச பணியாளர்களின் வேதனம் வாழ்க்கை செலவுக்கு ஏற்ற வகையில் திருத்தப்படும் எனத் தாம் உறுதியளிக்கின்றார் எனவும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.







# இன்றைய ராசி பலன்கள் - 24.08.2024




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்களின் வளர்ச்சிக்கு இன்றைய நாளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்துக்கு முன் முடிக்க இயலும். இன்று பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் சில மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று சொத்துகள் வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் உடல் நலம் சிறப்பாக இருக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பலன்கள் தாமதமாக கிடைக்கும் சூழ்நிலை காணப்படுகின்றது. இன்று மகிழ்சிகரமான நாளாக காணப்படாது. இன்று அதிகமான எதிர்பார்ப்பு கூடாது.

அதிகமான பணிகள் கவலையை அளிக்கும். திட்டமிட்டு அதன்படி பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க தவறுவீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைக்க இனிமையான வார்த்தைகளை பேசுங்கள்.

நிதிநிலைமை அதிருப்தி அளிக்கும் வகையில் இருக்கும். உங்கள் நிதி தேவைகளை சௌகரியமாக கையாளும் சூழ்நிலை இன்று இருக்காது.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம். நீங்கள் உங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுங்கள்.




இன்று உங்கள் செயல்களை அறிவுப்பூர்வமாக அணுக வேண்டியது அவசியம். இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தாகத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சில கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பரம்மரிக்க சிறப்புடன் திட்டமிட வேண்டும்.

இன்று ஆரோக்கியம் மிதமாக இருக்கும். கால்களில் வலி மற்றும் விறைப்புத்தன்மை ஏற்படலாம். இதனால் கவலை ஏற்படும்.




இன்று உங்கள் நண்பர்கள் மற்றும் பரிச்சயமானவர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் நண்பர்களை மகிழ்விப்பீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் உங்கள் மீது நல அபிப்பிராயம் ஏற்படும்.

உங்களின் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். நிதி நிலைமை செழிப்பாக இருக்கும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று உங்கள் எதிர்காலத்துக்காக உங்களை முன்னேற்றிக் கொள்ளும் வழி வகைகள் கிடைக்கும். எதிர்மறையான போக்கை தவிர்ப்பதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். விரும்பத்தகாத சூழ்நிலைகளை தவிர்க்க உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது சர்ச்சைக்குரிய விஷயங்களை தவிர்க்கவும். உங்கள் துணையிடம் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பது கடினமாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

பதற்றம் காரணமாக உங்கள் கால்களில் வலி ஏற்படலாம்.




இன்று பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்த வேண்டும். அவநம்பிக்கை தரும் எண்ணங்களை தவிர்த்து நேர்மறையாக எண்ணினால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று உறுதியான மனநிலையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறிருந்தால் தடைகளை சமாளித்து பணிகளை சிறப்பாக ஆற்ற இயலும்.

சில குடும்ப பிரச்சினைகளில் உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். இதனால் இருவரிடையே கருத்து வேற்பாடு காணப்படும்.

இன்று பண வரவிற்கான சாத்தியம் கிடையாது. கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

இன்று ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படலாம்.




இன்று உணர்ச்சிவசப்பட்டு காணப்படுவீர்கள். உங்களிடம் காணப்படும் பதற்றம் உங்கள் பேச்சில் வெளிப்படும். உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த பிரார்தனை மேற்கொள்ளுங்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். கூடுதல் பணிச்சுமைகள் உங்களுக்கு கவலையை அளிக்கும். சிறந்த பலனைக் காண நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் நட்போடு பழக வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று தேவையற்ற செலவுகள் செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

கணுக்கால் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது சிறிது பதற்றமாக காணப்படுவீர்கள்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாகக் கையாள்வீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் பரஸ்பர அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உறவின் பிணைப்பை வலுபடுத்தும்.

நீங்கள் பங்குகளில் செலுத்தும் பணம் லாபத்தை அளிக்கும். எதிர்பாராத பண வரவிற்கு சாத்தியம் உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.08.2024




இன்று மிகவும் சாதகமான நாள். உங்கள் இனிமையான வார்த்தை மூலம் நெருக்கமானவர்களின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள். நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

பணியிடத்து சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களால் பாராட்டப்படும்.

உங்கள் காதலரை இன்று மாலை சந்த்தித்து மகிழ்ச்சியுடன் இருக்கலாம். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையை மகிழ்விக்கலாம்.

இன்று பண வரவு மகிழ்ச்சி தரக் கூடியதாக இருக்கும். இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.




இன்று சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். திரைப்படம் பார்த்தல் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழ்நிலை காணப்படும். சில சமயங்களில் உங்கள் பொறுமையை இழப்பீர்கள். உங்களின் நாணயம் சந்தேகிக்கப்படலாம்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். சகஜமாக நடந்து கொள்வது நல்லது.

பணப்புழக்கம் இன்று மகிழ்ச்சிகரமாக இருக்காது. கூடுதல் பொறுப்பு காரணமாக இன்று செலவுகள் ஏற்படும்.

கால் வலி மற்றும் தலிவலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நலலது.




இன்று உங்களிடம் அமைதியின்மை காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் இந்த சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம். உங்கள் எதிர்கால வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை சிறப்பாக இயற்ற நீங்கள் திட்டமிட வேண்டும். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவையில்லாத செலவினங்கள் ஏற்படும். கவனமாக திட்டமிடவும்.




அனுசரித்து விட்டுக்கொடுத்து நடந்து கொண்டால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும். தியானம் அல்லது பிரார்த்தனை செய்வதற்கு இன்றைய நாள் ஏற்றது.

உங்கள் செயல் திறனுக்கு விமர்சன ரீதியான பாராட்டுக்கள் கிடைக்கும். உங்களின் சிறப்பான தகுதிகளை வெளிக்கொணர்ந்து வெற்றி பெறுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகளும் கிடைக்கலாம்.

உங்கள் நகைச்சுவை அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத்தொகை பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை ஏற்படுத்தும்.

நீங்கள் திடமாக காணப்படுவீர்கள். இது உங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park